23 ஆகஸ்ட்டு 2020

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொது காலம் 21ம் ஞாயிறு

மகிழ்ச்சியுடன் குணமளிக்க அனுப்பப்பட்டோம்




பிலிப்பு செசரியா பகுதிக்குச் செல்லும் வேளையில், தம்மைப் பற்றி மக்கள் என்னச் சொல்கிறார்கள் என்பது குறித்து தமது சீடர்களிடம் இயேசு வினவினார். அதற்கு சீமோன் பேதுரு, இயேசு மெசியா, வாழும் கடவுளின் மகன் எனப் பதிலளிக்கிறார். சீமோன் பேதுருவின் நம்பிக்கை அறிக்கையைப் பாராட்டும் இயேசு, இது கடவுளின் வெளிப்பாடு என்கிறார். சீமோன் பேதுருவின் இந்த நம்பிக்கைக்குரிய பதிலைத் தொடர்ந்து, அவரை 'பாறை' என இயேசு அழைக்கிறார். அந்த பாறையின் மீது தமது திருஅவையை இயேசு கட்டுகிறார். பேதுருவிற்கு திருஅவையைத் தலைமைத் தாங்கிச் செல்லவும் தவறா வரத்தையும் இயேசு வழங்குகிறார்.

திருஅவைக்குத் தலைவராக பேதுருவைத் தேர்வு செய்தது, கடவுளின் வாழ்வளிக்கும் புதிய வழியின் எடுத்துக் காட்டாக அமைகிறது. வலிமையை மேற்கொள்ள பலவீனமானதை இயேசு பயன்படுத்துகிறார். இயேசுவின் பணியைத் தொடர,. பேதுருவிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பு முக்கியமானது.

பேதுருவிடம் இயேசு கேட்ட கேள்வி, “என்னை யாரென நீ சொல்கிறாய்?” கிறிஸ்துவின் சீடர்கள் என்ற முறையில் அன்றாடம் நாம் எதிர்நோக்கும் கேள்வியாகும். நாம் வாழும் வாழ்க்கையை வைத்து நம்மை பற்றி தீர்மானிக்க விட்டுவிடுவோம்.

நாம்தான் திருஅவை. அப்படியென்றால் நாம் உண்மையாகவே இயேசுவின் சீடர்களா? அவரது திருவுடலின் உறுப்புகளா? நற்செய்தியை ஏற்றுக்கொள்வது, திருஅவையின் ஒவ்வொரு உறுப்பினரின் அடிப்படை தகுதி. நமது அன்றாட வாழ்க்கைமுறை, இயேசுவின் நற்செய்திக்குச் சான்று பகர வேண்டும். கடவுளின் மீட்புத் திட்டத்தில் ஒத்துழைக்கவும் பங்கு பெறவும் அவரது அன்பு மற்றும் சேவை மனப்பான்மையால் நாம் இட்டுச் செல்லப்பட வேண்டும். இயேசுவில் வெளிப்படுத்தப்பட்ட கடவுளின் அன்பையும் நன்மைத்தனத்தையும் உலகமெங்கும் பறைசாற்ற வேண்டும். இந்த பொறுப்பை முன்நிறுத்துவது முக்கியம். இதனால், கடவுளின் பணியில் நாமும் பங்காளி என்ற தகுதியைப் பெறுவோம்.

திருஅவையின் உண்மையான பாறையாக இருக்கும் வாழும் கடவுளின் மகன் இயேசு கிறிஸ்து எப்போதும் நமது மையமாக இருப்பார். புனித பேதுரு காலத்தில் இருந்தது போல, மக்களைக் கட்டியெழுப்புவதற்கு இன்றும் நம்பிக்கைக்குச் சாட்சியாக விளங்கவும், கிறிஸ்துவத் தலைமைத்துவத்தை வழங்கவும் பற்றுறுதி கொண்ட திருத்தூதர்கள் தேவைப்படுகின்றனர்.

திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர்கள், திருப்பணியாளர்கள் அனைவரும் பணியாளர்களே. புனித பேதுருவின் வழிமரபினரான திருத்தந்தை பிரான்சிசை இன்று நினைவுகூருவோம். நமது தலைமை ஆயன், நம்பிக்கையிலும் விவேகத்திலும் என்றும் நிலைபெற்று, இறையரவை நோக்கி நம்மை வழிநடத்த இறைவன் அருள்புரிவாராக. ✝

**நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன்.**

– மத். 16:16

**இன்றைய வாசகங்கள்:**

எசா. 22:19-23;
திப. 137: 1-3, 6, 8:
உரோ. 11:33-36;
மத். 16:13-20

**வாரம் ஒரு வசனம்**

இயேசுவின் நற்செய்திக்கு நாம் சாட்சிகளாக இருக்க வேண்டும்

INTERNAL CIRCULATION ONLY
BUL 34/2020

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

**மினவுதல் மாதா தேவாலயம்**
85 A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. சேவியர் அண்ட்ரூ
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. கென்னத் கோபால்

# *2020 ஆம் ஆண்டின் கருப்பொருள்*
# மகிழ்ச்சியுடன் குணமளிக்க அனுப்பப்பட்டோம்
## *2020 ஆகஸ்டு (ஆவணி) மாதத்தின் கருப்பொருள்:*
## ஒருமைப்பாட்டை நோக்கிய குணமளிப்பு

**பங்கு அலுவலக நேரம்**
திங்கள் - வெள்ளி: காலை 9.00 - மாலை 5.30
சனி: காலை 9.00 - மதியம் 1.30
(மறு அறிவித்தல் வரை)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்: பொதுக்காலம் 21ஆம் ஞாயிறு 22 – 23 ஆகஸ்டு 2020**
எசா 22: 19-23 தி.பா: 138: 1-2, 2-3, 6, 8 உரோ 11: 33-36 மத்தேயு 16: 13-20
**"ஆண்டவரே ! என்றும் உள்ளது உமது பேரன்பு. ! (தி.பா 138)**

**நிரந்த குடியுரிமை மற்றும் வெளி நாட்டுதொழிலாள சகோதர சகோதரிகளே! அரசாங்கத்தின் வழிமுறைப்படி மறு அறிவிப்பு வரும் வரை, நீங்கள் ஆலயத்திற்கு வந்து திருப்பலியில் கலந்துகொள்ள இயலாது என்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.**

பங்கு மக்கள் அனைவரும் பங்கேற்கலாம். ஒவ்வொரு மொழி திருப்பலிக்கும் 380 பேர் மட்டுமே அனுமதிக்கப்படுவர். திருப்பலியில் பங்கேற்க விரும்புவோர் கொடுக்கப்பட்டுள்ள இணைப்பைப் பயன்படுத்தி, உங்களின் பெயர்களைப் பதிந்துகொள்ளவும்.
30-08-2020 ( ஞாயிறு) காலை 9.00 மணி ( சீன மொழி); காலை 9.00 மணி ( தேசிய மொழி) திருப்பலியின் நேரங்கள் மற்றும் மொழிவாரியாக திருப்பலிகளின் அட்டவணை அவ்வப்போது மாற்றத்திற்குரியது என்பதை கவனத்தில் கொள்ளவும். பங்கின் திருப்பலிகளை இணையத்தின் வாயிலாகவும் காணலாம். ***http://live.visitationseremban.org***

| பங்கு காணிக்கை | 16/8/20 : RM3,906.90 | ஆராதனை அறை விசேட காணிக்கை | 16/8/20 : RM2,146.70 |
|---|---|---|---|

குறிப்பு:

1) திருப்பலியில் பங்கெடுக்க வருபவர்கள் கட்டாயம் முகக் கவசம் அணிந்திருக்க வேண்டும். தயவு செய்து உங்களுக்கான முகக்கவசத்தை உடன் கொண்டு வரவும்.
2) ஆலயத்திற்கு திருப்பலி தொடங்குவதற்கு ஒன்றரை மணி (1 1/2 ) நேரத்திற்கு முன்னதாக வர வேண்டும். பதிவு மற்றும் இதர தயாரிப்புகள் செய்வதற்கு இது தேவைப்படுகிறது.

**நிலையான ஒழுங்குமுறை நடவடிக்கைகள் (SOP)**
1) திருப்பலியில் பங்கெடுக்க வருபவர்கள் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.
2) திருப்பலிக்கு வருபவர்கள் தங்களுடைய அடையாள அட்டையை உடன் கொண்டுவர வேண்டும்.
3) கொடுக்கப்பட்டுள்ள வரைமுறைகளில் நீங்கள் இடம்பெற்றிருந்தாலும், உங்களுக்கு சளி , காய்ச்சல், இருமல், மூச்சு தொடர்பான பிரச்னைகள் இருந்தால் திருப்பலியில் பங்கெடுக்க வர வேண்டாம்.
4) முக கவசம் அணிதல்/ பெயர் பதிவு/ வெப்ப நிலை சோதித்தல் / சுத்திகரிப்பு தெளிப்பானைக் கைகளில் பூசிக்கொள்ளுதல் ஆகியவை ஆலயத்திற்கு உள்ளே வரும்போதும், வெளியே செலும்வோதும் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டியவை.
5) திருப்பலியில் பங்கெடுக்க வரும் ஒவ்வொருவருக்கும் எண் எழுதப்பட்ட ஒரு அட்டை தரப்படும். திருப்பலிக்குப் பின் அதை அதற்குரிய இடத்தில் மீண்டும் ஒப்படைக்க வேண்டும்.
6) தற்போது ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படாது என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.
7) இருக்கைகளில் குறிப்பிட்ட இடத்தில் மட்டுமே அமர வேண்டும்.
8) தொடுதல் / அணைத்தல்/கைகுலுக்குதல் ஆகியவை தடை செய்யப்பட்டுள்ளது. நற்கருணை கைகளில் மட்டுமே வழங்கப்படும்.
9) கழிவறைகளைப் பயன்படுத்தும்போது தூய்மையைப் பேணுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். சமூக இடைவெளியைக் கடைப்பிடித்தல் அவசியம்.
10) திருப்பலிக்குப் பின் உடனடியாக ஆலயவளாகத்தை விட்டு செல்லுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நடமாட்டக் கட்டுப்பாட்டு நேரத்தில் (2020 மார்ச் 18 - 09 *ஆகஸ்டு*) வரை பெறப்பட்ட காணிக்கைகள்:

| பங்கு காணிக்கை | பங்கு காணிக்கை | தியான இல்லம் | பமமேகு உணவு வங்கி |
|---|---|---|---|
| மொத்த தொகை: | **RM 53,523.00** | **RM 33,458.00** | **RM 10,955.00** |

***உங்களின் அனைத்து வகையான பங்களிப்புகளுக்கும் மிக்க நன்றி. இறைவன் உங்களை நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!***

**நன்கொடை / காணிக்கைகள் கீழ்க்கண்டவற்றில் எதற்கு நன் கொடை அல்லது காணிக்கை செலுத்துகின்றீர்கள் என்று குறிப்பிடவும்:**

(1) பங்கின் நிதி (2) திருப்பலி கருத்துகள்
(3) ஆராதனை அறை சீரமைப்பு (4) பமமேப உணவு வங்கி

**உங்களுடைய தொகையை இணையத்தின்வழி பங்கின் வங்கிக் கணக்கில் செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம். விவரங்கள் :**
1.வங்கியின் பெயர்: **Public Bank Berhad**
2.வங்கிக் கணக்கில் உள்ள பெயர்:: **Church of Visitation**
3.வங்கிக் கணக்கு எண்: **3121194612**

**உங்களின் கவனத்திற்கு:**
மரித்தோருக்கான சடங்குகள் இல்லங்களில் நடத்தப்படாது. மினவுதல் தேவாலயத்தின் இறந்தோருக்கான சடங்கு அறையில் நடைபெறும். இது உடனடி நடப்புக்கு வருகிறது.

**பணம் செலுத்தியபின் எதற்கு நீங்கள் பணம் செலுத்தினீர்கள் என்பதை குறிப்பிட மறவாதீர்கள்:**
**(i) தொகை (ii) என்ன காராணம்:**
**(1) பங்கின் நிதி காணிக்கை**
(2) **திருப்பலி ஒப்புக்கொடுத்தல்:** இனிவரும் காலங்களில் இணையத்தின் வழி பணம் செலுத்த வேண்டாம். ஆலய அலுவலகத்தை நாடவும். அலுவலகம் திங்கள் முதல் சனி வரை திறந்திருக்கும்
**(3) ஆராதனை அறை சீரமைப்பு**
**(4) பங்கு மனித வள மேம்பாட்டின் உணவு வங்கி ( கூடுதல் தகவல்களுக்கு: ஜோன் டேவிட்சன் (017-615 8961) அல்லது பௌ்னதெத் (012- 2715840)**
**பங்கு அலுவலக குறிப்புகளுக்காக, நீங்கள் பணம் செலுத்திய ரசீதை பங்கின் மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும்.**
serembanvisitation@gmail.com

- **உறுதிபூசுதல் அருளடையாளக் கொண்டாட்டத் திருப்பலி ஆகஸ்ட் 30, 2020 ( சனிக்கிழமை) பகல் 2.00 மணி**
உறுதிப்பூசுதல் அருளடையாளத்தைப் பெறவிருக்கும் மாணவர்கள் தங்களுக்கான மறைக்கல்வி வகுப்புகளை 26-07-2020 ( ஞாயிறு) முதல் ஆரம்பித்துள்ளனர்.
**வகுப்புகள் நடைபெறும் கால அட்டவணை:**
**ஆங்கிலம்:** காலை 8.00 - 9.30 **தமிழ் :** காலை 9.45 - 11.15 **மாண்டரின்:** காலை 11.30 - 1.00 (பகல்) வரை
**வகுப்பறை:** ஆலய மண்டபத்தின் மேல்மாடி அறை.
அனைத்து பாதுகாப்பு நடைமுறைகளும் கண்டிப்பாக பின்பற்றப் பட வேண்டும்
**உறுதிப்பூசுதல் மாணவர்களுக்கான**
- **ஒப்புரவு அருளடையாளக் கொண்டாட்டம் :** ஆகஸ்ட் 21, 2020 (வெள்ளி) / மாலை 6 – 9 மணி வரை
- **குருவானவரோடு சந்திப்பு :** ஆகஸ்ட் 22, 2020 (சனி) **காலை 9 – மதி 12 வரை (ஆ/சீ) /மதியம் 2- 5 வரை (ஆ/த)**
- **திருப்பலிக்கான ஒத்திகை: ஆகஸ்ட் 28, 2020 (வெள்ளி) மாலை 8 மணி**
- **தியான அறை** - எவ்வாறு இந்த அறை தயாராகிறது என்பதை பங்கு முக நூல் மற்றும் இணையத்தின்வழி காணவும்.
- **பங்கின் அனைத்துப் பணிக்குழுக்களின்** தலைமைத்துவமும் மாற்றம் காணவுள்ளது

**மரித்த ஆன்மாக்களுக்காக மன்றாடுவோம்.**
சூசன் பார்பரா மைக்கல் இறப்பு: 19/8/20
**முடிவில்லாத ஒளி இவர்கள் மேல் ஒளிர்வதாக!**

ஆங்கில பாடல் குழுவில் ( ஞாயிறு திருப்பலி காலை 9.00மணி) இணைந்துப் பாட புதிய உறுப்பினர்களை வரவேற்கிறோம். ஆர்வமுள்ளோர் தொடர்பு கொள்ள: திரு. டேனியல் ராம் -012-6588715

**குழந்தைகளுக்கான திருமுழுக்கு அருளடையாளம்:**
**தே. மொழி**: 22-08-2020 மாலை 7.00மணி
குழந்தையின் பெற்றோர்கள் ஆலய நுழைவாயிலில் நிற்பதோடு, பாதுகாப்பு விதிமுறைகளையும் கடைப்பிடிக்கவும்

அன்பு பங்கு மக்களே, பங்கு மனித வளமேம்பாட்டுப் பணிக்குழுவின் உணவு வங்கிக்கு நீங்கள் கொடுத்து வரும் வற்றாத ஆதரவுக்கு நன்றி. தொடர்ந்து ஆதரவு தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அருட்பணியாளர் மறைதிரு பிலிப் தே ஓசிடி, அவர்கள் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டதை முன்னிட்டு சிரம்பான் பங்கு மக்கள் சார்பாக வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கின்றோம்